இரணைமடுப் பகுதியில் யானைகள் அட்டகாசம்

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49 மலர் 9
போன் 389 National Tamil Daily இதழ் 324
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புதன்கிழமை ஐப்பசி 6 றஜப். 18 [23-10-67]

பாதிக்கப்பட்ட விவசாயிகள் நஷ்டஈடு கோரியுள்ளனர்

யாழ்ப்பாணம், திங். கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் கடந்த சில நாட்களாக யானைக் கூட்டங்களின் அட்டகாசத்தால் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான பயிர்கள் நாசமாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு கனகபுரம் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்துக்குள் புகுந்தஇரு அங்கு யானைகள் பயிரிடப்பட்டிருந்த பல உப உணவுப் பொருட்களை அழித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இதுமட்டுமன்றி இரணைமடு வட்டாரங்களிலும், கனகாம்பிகை அம்மன் கிராமத்திலும் நள்ளிரவில் சென்ற இந்த யானைக் கூட்டம் வாழை, தென்னை, மா போன்ற பல பயிர்களையும் அடியோடு அழித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, யானை

[6-ம் பக்கம் பார்க்க]

நீதிராஜா புதிய தமிழ் சென்ட்டராகத் தெரிவு

சீதா சனவிரத்னவுக்கும் சென்ட்டர் பதவி

கொழும்பு ஞாயிறு

திரு. ரி. நீதிராசா புதிய தமிழ் சென்ட்டராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். பெல்மதுளை தொகுதியில் நடைபெற்ற உபதேர்தலில் தோல்வியுற்ற திருமதி சீதா சனிவரத்னவும் ஒரு சென்ட்டராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறர்.

சென்ட்சபையில் காலியாகவிருந்த 5 சென்ட்டர் பதவிகளுக்குமான புதியசென்ட்டர்களின் பெயர்களை மக்கள் பிரதிநிதிகள்சபையில் சபாநாயகர் இன்று வெளியிட்டார்.

எதிர்கட்சி சார்பில் திருவாளர்கள் ஏ. பி. ஜெயசூரியாவும் டிக்ஸன். டி. சில்வாவும்அரசாங்கக்கட்சிசார்பில் திருவாளர்கள் எட்மன்ட் சமரவிக்கிரமா, ரி. நீதிராஜா, திருமதி சீதா சனிவரத்தினஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பிரதிநிதிகள்சபை அங்கத்தவர்களால் இந்த ஐந்து சென்ட்டர்களும் ஏகமனதாகத்தெரிவுசெய்யப்பட்டனர்.

பூன்வாட் விவகாரம்

பர்மா அதிகாரிகள் இலங்கைவந்தனர்

கொழும்பு, ஞாயிறு பர்மாவிலிருந்து இன்று 4 பேரைக்கொண்ட அதிகாரிகள் கோஷ்டியொன்று இலங்கை வந்துள்ளது.

பர்மிய தூதரின் மனைவி திருமதி ஷேர்லி பூன்வாட் மரணம் சம்பந்தமாக பர்மா அரசாகங்த்தின் சார்பில் விசாரணைகள் மேற்கொள்ளவே இவர்கள் வந்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

ரத்மலானை விமான நிலையத்தில் இக்கோஷ்டி வந்திறங்கியவுடன் தனிப்பட்ட கார் ஒன்றில் ஏறிச் சென்றனர், அவர்கள் பிரயாணம் செய்த விமானம்வரும்வரை பர்மிய தூதரகத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி விமான நிலையத்தில் காத்திருந்தார். அவர் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி தம்மை மறைத்துக்கொண்டிருந்தார்.

இந்த அதிகாரிகளின் வருகை மிகவும் இரகசியமாகவே நடைபெற்றது.

‘கொலை செய்யும் எண்ணமிருந்தால்

தோட்டாக்கள் தீரும் வரை ராதா சுட்டிருக்கலாமல்லவா

தவறுதலாகவே சுடப்பட்டது’

ராதா வழக்கறிஞர் தொகுப்புரை

சென்னை, அக்.22

‘துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது எம்.ஜி.ஆர். தோட்டத்தில் இருந்த 14 பேரும், ராதா துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வெளியே தனிமையாக நடந்து கொண்டிருந்தபோது ஏன் காருக்குள் அவரைப் போட்டு பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டு செல்லாமலிருந்தார்கள்? ராதாவை அவர்கள் தனியனாக விட்டதற்குக் காரணம், சம்பவத்தின்போது நின்ற முக்கிய சாட்சியான பட அதிபர் வாசுவை ‘மடக்’கிக்கொள்வதில் ஈடுபட்டிருந்ததே’ என்று ராதாவின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. மோகன் குமாரமங்கலம், இன்றுகாலை தொடர்ந்து தொகுப்புரை நிகழ்த்துகையில் கூறினர்.

சினிமாநடிகர்கள் எம்.ஜி.ஆர். ராதா துப்பாக்கிச் சூட்டுவழக்குஇன்றுசென்னை செஷன்ஸ் கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் லக்ஷ்மணன் முன்னிலையில் நடந்தபோது ராதாவின் சிரேஷ்ட் வழக்கறிஞர் திரு.மோகன் குமாரமங்கலம் தொகுப்புரைநிகழ்த்தினர்.

‘ராதா, எம். ஜி. ஆரு

[6-ம் பக்கம் பார்க்க]

வல்வெட்டித்துறையில் கண்காணிப்பு தீவிரம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறை புகுமுக வாயில்கள் பொலிசாரின் கட்டுக்காவலுக்குள்ளாகியுள்ளது. கள்ளக்கடத்தல், கள்ளக்குடியேற்றம் ஆகியவற்றைத்தடுக்கும் நோக்கமாகத்தொண்டமானாறுஉப்புமால் கடற்கரையில் தற்காலிகமாக பொலிஸ்நிலையமொன்றும் அமைக்கப்படவிருக்கிறது.

தற்பொழுது கடத்தல் பொருட்கள் வல்வெட்டித்துறைக்கு தொண்டமானாற்றுக்கூடாக கொண்டு செல்லப்படுவதாகவும் ,தொண்டமானாற்று, வளலாய்ஆகிய இடங்களுக் கூடாகத் தீவிரமாக இந்தியாவுக்குக் கள்ளக்கடத்தல் நடைபெறுவதாகவும் கருதப்படுவதாலேயே இந்நிலையம் அமைக்கப்பட்டதாகத்தெரிய வருகிறது.

சார்ஜன்ட் வடிவேலுதலைமையில் இயங்கி வரும் பொலிஸ் கோஷ்டியொன்று இப்பாதைகளால் செல்லும் வாகனங்கள் மீது பலத்த கண் காணிப்பு செலுத்திவருகிறது.

இலங்கையிலிருந்து போகும்

1500 இந்தியருக்கு மைசூரில் புகலிடம்

சென்னை, அக்.22

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா திரும்பவிருக்கும் இந்திய வம்சாவழியினரில் 1500 பேர் மைசூரில் குடியமர்த்தப்படவிருக்கின்றனர்.

தென்னன்டமாவட்டத்தில் உள்ள ரப்பர் தோட்டங்களில் இவர்கள் குடியமர்த்தப்படுவார்கள். இதற்கு மூன்றரைக்கோடி ரூபாய் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது இந்தச் செலவை மத்திய அரசும் மைசூர் ராஜ்யஅரசாங்கமும் பகிர்ந்து கொள்ள விருக்கின்றனர்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

விசேஷ

மலிவு விற்பனை

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

எமது சொந்த கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பெற்ற

கைத்தறி ஜவுளி வகைகளையும்

மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தீபாவளி தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள

இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

ஆ. அப்பையா அன் கோ.,

பிரதான ஸ்தாபனம்:
பாங்கி சாலை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 506

கிளை ஸ்தாபனம்:
54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நேர்மையாய் இரு. விசுவாசமாய் இரு. அத்துடன் கவனமாகவும் உண்மையாகவும் இரு. இப்படியிருந்தால் வெற்றியும் புகழும் உன்னுடையது.

—சுவாமி சிவானந்தா

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஸு ஐப்பசிமீ 6வ (23-10-67)

கிராமாபிவிருத்தித் துறையில் பயிற்சி அளிக்கப்படும்

வலி. வடக்கும் பச்சிலைப்பள்ளியும் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி பிரிவும் பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரி பிரிவும் இவ்வருடம் அச்சுவேலியில் இருப்பிட வசதியுடன் கூடிய கிராமாபிவிருத்திச் சம்பந்தமான பயிற்சி வகுப்பில் பயிற்சி பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பயிற்சிவகுப்பு அடுத்தமாதம் பிற்பகுதியில் ஆரம்பமாகவிருக்கின்றது. இத்தகவல்கள் வடபகுதி அரசாங்க அதிபர் திரு. [illegible] அபயசேகரா தலைமையில் நடைபெற்ற கிராம அபிவிருத்தி சம்பந்தமான மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டுக்கு வவனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சகல கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களும காரியாதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி வகுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இரு காரியாதிகாரி பிரிவிலிருந்தும் மாதர் முன்னேற்றச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், விவசாயக்கழகங்கள், ஐக்ய சமூக நிலையங்கள், ஆகியவற்றைச் சேர்ந்தபிரதிநிதிகள் கலந்து கொள்ளத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களுக்கு சுகாதாரம், கூட்டுறவு, விவசாய உற்பத்திபோன்ற பல துறைகளிலும் சுமார் ஒரு வார பயிற்சி அளிக்கப்படும்.

இவைதவிர இது சம்பந்தமான 3நாள் கருத்தரங்கு ஒன்றும் அடுத்தமாதம் 15-ம்திகதி நெடுந்தீவில் நடைபெற இருக்கிறது. அடுத்த மாதம் 25-ம்திகதி விஸ்வமடுக்குளம் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்திலும் ஒரு கருத்தரங்கு நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் புரட்டாதி மாதத்திற்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்ட சகல காரியாதிகாரி பிரிவிலும் இந்த 3நாள்கருத்தரங்கை நடாத்த நிச்சயிக்கப்பட்டுள்ளது. [ந.நி]

கமிஷனர்கள் லீவில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகர சபை விசேஷ கமிஷனர்கள் ஆட்சிக்குக் கீழ் கொண்டுவரப்பட்ட ஒன்றரை வருட காலத்தில் நேற்று எந்தக் கமிஷனருமில்லாத நிலையில் அலுவல்கள் நடைபெற்றன

விசேஷஆணையாளர்களில் ஒருவரான திரு. பெர்னண்டோ கொழும்பிலேயே இருக்கிருர். மற்றைய இரு விசேஷ ஆணையாளர்களான திரு, என். நடேசனும், திரு. எஸ்.சி. மாணிக்கவாசகரும் லீவில் சென்றுள்ளதாகத் தெரிகிறது, மாநகர சபை ஆணையாளரான திரு. ஹட்சன் செல்வராஜாவும் லீவில் சென்றதாலேயே இவ்விதம் கமிஷனர்கள் எவருமின்றி யாழ். மாநகரசபை நேற்று இயங்கவேண்டியிருந்தது.

நேற்று யாழ் மாநகர சபைக்கு இவர்களைச் சந்திக்கச் சென்ற பொது மக்கள் பலரும் ஏமாற்றத்துடன் திரும்பியதாகவும் தெரிகின்றது. [ந நி]

இன்றைய பலன்

[23-10-67]

திங்கட்கிழமை

[ஐப்பசி மாதம் 6 வ]

நட்சத்திரம் - மிருகசீரிடம் பிற்பகல். இரவு 1-29 மேல் திருவாதிரை.

திதி - பஞ்சமி இரவு 12-11 மேல் ஷஷ்டி.

சுபநேரம் - 12-02 — 1-32.

ராகுகாலம் - 7-32 — 9-02.

மேஷம் - கை நிறையப் பணம், காத்திருக்கும் உறவு.

ரிஷிபம் - தொழிலில் போட்டி, தொல்லையைத் தவிர்.

மிதுனம் - முன்னேற்றமுண்டு, முயற்சியே வேண்டும்.

கடகம் - வித்தை பலவிதம், விருந்தும் உண்டு.

சிம்மம்- ஏமாறவேண்டிவரும், விழிப்புடன் இரு.

கன்னி- நல்ல திருப்பம், நலன்கள் பெருகும்.

துலாம் - பகை கண்டு நகை, பறந்துவிடும் தடை.

விருச்சிகம் - அகில் பகைவர், அவதானம் வேண்டும்.

தனுசு - ஒளி விடும் வாழ்வு, துளிர் விடும் காதல்.

மகரம்-தவருன பாதை, தலை குனிய நேரிடும்.

கும்பம் - இலட்சிய வெற்றி, இன்று பொன்னுள்.

மீனம் - புது முயற்சி, பொதுசனத் தொடர்பு.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

நாட்டிலும் நகரிலும்

காலையிலே ஓர் ஓலை வந்தது கந்தோருக்கு.

'இரசிகமணி' கனக. செந்திநாதன் அவர்களுக்கு அவரது 50-ஆம் ஆண்டு நிறைவின் போது யாழ். இலக்கிய வட்டத்தினர் விழா எடுக்கப் போகிருர்கள் என்று அந்த அழகாக அச்சிடப்பட்ட ஓலை கூறியது. குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நாளை மாலை 5 மணிக்கு நடக்கவிருக்கும் இவ்விழாவில் செந்திநாதன் அவர்களைப் பாராட்டி, வாழ்த்தி அவர் எழுதிய மூன்று நூல்கள்— 'வெண்சங்கு' [சிறுகதைகள்], 'பிரபந்தப் பூங்கா'[வானொலிச் சொற்பொழிவு], இரசிகமணி மலர் மாலை ஆகியவையும் வெளியிடப்படும்.

கனக. செந்திநாதன் ஒரு பழைய இலக்கியக் கை. 'இலங்கையர் கோன்', சி. வைத்தியலிங்கம், சோ. சிவபாதசுந்தரம் முதலிய ஈழத்து எழுத்தாளர் பரம்பரையைச் சேர்ந்தவர். 'ஈழகேசரி' அவரை வளர்த்தெடுத்து உருவாக்கியது. கடந்த முப்பது ஆண்டுகளாக இலக்கியத் தொண்டாற்றி வரும் செந்திநாதன் 'ஈழத்தில் இலக்கியவளர்ச்சி', 'ஈழத்து கவி மலர்கள்' முதலிய ஆறு நூல்களை எழுதியுள்ளார். கதை, கவிதை, வரலாறு முதலிய சகல துறைகளிலும் அவருடைய இலக்கியக்கரங்கள் துழாவியிருக்கின்றன.

மல்லாகம் ஸ்ரீமன் கத்தோலிக்க பாடசாலையில் இப்பொழுது சைவப்பாடம் கற்பிக்கும் செந்திநாதன், பள்ளிக்கூடங்களை அரசாங்கம் ஏற்க முன்பு சைவப்பள்ளிக்கூடங்களில் பல ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்

அவர் எழுதிய 'ஈழத்தில் இலக்கிய வளர்ச்சி' முப்பது ஆண்டுகளாக ஈழத்துப் பத்திரிகைகளிலும் வானொலியிலும் வெளி வந்த கதை கட்டுரை, கவிதைகளையும் அவற்றை எழுதியவர்களைப் பற்றியும் தொகுக்கப்பட்ட ஓர் இலக்கிய வரலாறு. இதைப் பற்றிப் பத்திரிகைகளில் பல விதமான சர்ச்சைகள் எழுந்தன. செந்தி நாதனுக்கு அவற்றின் மீது எவ்வித அக்கறையுமில்லை. அவர் ஒரு சர்மவாதி. பிரதிபலன் கோராது தொண்டு செய்யும் ஓர் இலக்கிய 'இரசிகர்'. இலங்கை சாகித்திய மண்டலம் அந் நூலுக்குப் பரிசு அளிக்காதது பற்றி அவருடன் பேசுகையில், 'என்னுடைய நூலுக்குப்பரிசுவேண்டுமென்று நான் விரும்பவில்லை; எனது இலக்கிய வரலாறு பிழையென்று கண்டால் பேராசிரியர்களும், கலாநிதிகளும் வேருெரு சிறந்த வரலாற்றை வெளியிடலாமே!' என்று அவர் கேட்கிருர்.

சாகித்திய மண்டலமோ எந்த மண்டலமோ பரிசு கொடுக்காவிட்டாலும், ஓர் எழுத்தாளனின் படைப்பைப் படித்துச் சுவைத்து மௌனப் பரிசு அளிக்கும் ரசிகமண்டலம் ஒன்று இருக்கிறது. எத்தனை பொற்கிழி தான் கிடைத்தாலும் இந்த மௌனப்பரிசு தான் எல்லாவற்றிலும் மேலானது. அது கிடைத்தற்கரியது.

ஒல்லியான ஸ்தூல சரீரத்துடன், மேல் வாயில் ஒருபல்லும் கீழ் வாயில் இரண்டு பற்களுமாக, எளிய உடையில் காட்சி தரும் செந்திநாதன், இலக்கியத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் புதுமைப்பித்தன், கல்கி, கு. ப. ரா. முதல் இன்றைய இளம் எழுத்தாளர்கள் வரை எல்லோரையும் பற்றி அளந்து கொட்டிக் கொண்டிருப்பார்.

[3-ம் கலம் பார்க்க]

[5ம் கலத் தொடர்ச்சி]

அவருடைய இலக்கிய ஆவேசம் அத்தகையது.

'சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் சோமசுந்தரப்புலவர், கணேசையர், கலைப்புலவர் நவரத்தினம், கலாநிதி சதாசிவையர் போன்றவர்கள் இலக்கிய வானில் நவக்கிரகங்களைப் போல் ஜ்வாலித்தனர். அவர்களையெல்லாம் கொண்டு நடத்தி அவர்களிடமிருந்து இலக்கியச் சாற்றைப் பிழிந்தெடுத்தார். 'ஈழகேசரி' பொன்னையா. இன்றுதொண்ணூறு பேர் தோன்றியும் அந்த நிலையைக் காணேம்' என்று ஏங்குகிருர் செந்திநாதன்.

இப்பொழுது 'ஈழகேசரி' பொன்னையா அவர்களைப் பற்றிய ஒரு நூலை எழுதிக் கொண்டிருக்கும் ரஸிகமணி தமது அருமைப் புதல்வியின் மறைவால் உற்சாகம் இழந்து நோய் வாய்ப்பட்டிருந்த போதிலும், இலக்கிய ரசனை இம்மியளவும் குன்ருது 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று தொண்டாற்றுகிருர்

அவர் தொண்டு மேலும் வளர்வதாக!

— வழிப்போக்கன்

வியட்னும்

வியட்னுமில் நடைபெறும் போருக்கு அமெரிக்காவிலும், இதர நாடுகளிலும் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுவருகிறது. உலகத்தின் பல பகுதிகளில் வாழும் மக்களிடையேயும், வியட்னுமில் நடைபெறுவது அநியாயமான போர் என்ற உணர்ச்சி வலுவடைந்துவருகிறது.

வியட்னும் போரில் அமெரிக்காவின் பங்கினை பொதுவாகவும், வட வியட்னும் மீதான அதன் குண்டு வீச்சை விசேஷமாகவும் பல நாடுகள் கண்டித்து வந்துள்ளன. ஆசிய நாடுகள் மட்டுமின்றி, ஐரோப்பிய நாடுகளும் கூட, அமெரிக்காவின் வியட்னும் கொள்கையை எதிர்க்கின்றன.

நேற்று அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனிலும், டோக்கியோ தொடக்கம் பாரிஸ் வரைக்கும், மற்றும் பல முக்கிய தலை நகரங்களிலும், வியட்னும்போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளன.

ஆனுல், இவ்வளவு எதிர்ப்புகளுமிடையே அமெரிக்காவிலுள்ள ஜோன்சன் நிர்வாகம், வட வியட்னும் மீதான குண்டுவீச்சை நிறுத்தவோ அல்லது தனது வியட்னும் கொள்கையை மாற்றவோ தான் தயாராயில்லை என்று அறிவித்துள்ளது.

ஐ நா. வில் சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான் யூ பேசுகையில் அடுத்த வருடம் நடை பெறவிருக்கும் அமெரிக்க ஜனுதிபதி தேர்தற் காலம்வரை வியட்னும் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுமென நம்புவதற்கிடமில்லை என்று குறிப்பிட்டிருப்பது, ஜோன்சனின் தற்போதைய பதவிக் காலம் முடிவுறும்வரை, ஜோன்சன் நிர்வாகம் தனது வியட்னும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமென்பதை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்துள்ளது.

சிங்கப்பூர் பிரதமர், சில தினங்களுக்கு முன்தான், அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சனுடன், வியட்னும் பிரச்னை உட்படப் பலஆசியப் பிரச்னைகள் பற்றி மனம் திறந்து உரையாடியிருந்தார்.

அமெரிக்க அரசாங்கத்தின் பிடிவாதத்துக்கும், வட வியட்னுமின் தளரா மனப்பான்மைக்கும் இடையே சிக்கித் தவிப்பது, எந்த மக்களின் வாழ்வுக்காகப் போராடுகிருேம என்று இருசாராரும் சாற்றுகின்றனரோ, அதே மக்கள் தான்.

அந்த மக்கள் தான் தினசரி கொல்லப்படுகின்றனர் அவர்களுடைய குடும்பங்கள் தான் தினசரி சின்னுபின்னப் படுத்தப்படுகின்றன. அவர்கள் வாழும் கிராமங்கள் நிர்மூலமாக்கப் படுகின்றன. அமெரிக்கக் குண்டுகளுக்கும், வியட்காங்கியரின் கைக்குண்டுகளுக்கும் பலியாகின்றவர்களும் அவர்களே.

இவர்களை இவ்விதம் தினசரி கொன்று குவித்துக்கொண்டே, இவர்களை மீட்பதாகக் கூறிக்கொள்வது விசித்திரமாகும்.

வியட்னும் பிரச்னைக்குத் தீர்வு காண்பதானுல், போரின் மூலம் அதைக் காண முடியாது. அமெரிக்காவிலுள்ள சிலர், போரை விஸ்தரிக்க வேண்டுமென்று வாதாடுகின்றனர். இது ஆபத்தான வாதம் உலகப் போருக்கு இது வழிகோலுமே தவிர, வியட்னும் போருக்கு முடிவு ஏற்படாது.

உலகப் பிரச்னைகளைச் சமாதான முறையில் பேசித் தீர்ப்பதற்கெனவே, ஐ. நா. சபை நிறுவப்பட்டுள்ளது. ஆகவே, ஐ. நா. மூலமாகவே வியட்னும் பிரச்னைக்குத் தீர்வு காண முயலவேண்டும். சம்பந்தப்பட்ட கட்சிகளனைத்தும் இந்த ஏற்பாட்டுக்கு உடன்படவேண்டும். அப்பொழுதுதான் வியட்னுமில் போர் நிற்க வழி பிறக்கும்.

ஆனுல் வல்லரசுகளின் போக்கைப் பார்க்கும்பொழுது, வியட்னும் பிரச்னைக்குச் சமீபத்தில்விமோசனம் பிறக்குமென்று தோன்றவில்லை.

ராதாவை...

[-1ம் பக்கத் தொடர்ச்சி]

அவரிடம் கூறவுமே, ராதாவும் வாசுவும் எம். ஜி. ஆர். தோட்டத்துக்குச் சென்றதாகப் புராசிக்கியூஷன் தரப்பினர் காட்ட முயன்றனர்.

பொங்கலுக்கு இரண்டு தினங்களுக்கு முன் இச்சம்பாஷணை நிகழ்ந்துள்ளது. படப்பிடிப்புக்குத் தயாராக எவ்வித கதையும் இருந்ததாகச் சாட்சியம் இல்லை. அப்படியானுல், எதைப் படம்பிடிக்க நினைத்தார்கள் என்று கேட்டார் திரு. குமாரமங்கலம். எம். ஜி. ஆர். நடந்து திரிவதைப் படமாக்க உத்தேசித்தார்களா? 'எம். ஜி. ஆர். எவ்வளவு பெரிய கவர்ச்சி நடிகராகவிருந்தாலும், கதையில்லாத அவருடைய படம் கூட்டத்தைக் கவராது' என்ருர் திரு. குமாரமங்கலம்.

கோயம்புத்தூர் கோஷ்டி ஒன்று இருந்ததா அல்லது இல்லையா என்பது பற்றிக் கவனம் செலுத்த வேண்டிய அவசியமே இல்லை என்றும் திரு. குமாரமங்கலம் குறிப்பிட்டார்.

நடிகர் எம். ஜி ராமச்சந்திரனை ரிவால்வரால் சுட்டுக் கொலை செய்ய முயன்றதாகவும், பிறகு அதே ரிவால்வரால் தன்னைத்தானேசுட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயன்றதாகவும் சினிமா நடிகர் எம்.ஆர். ராதா மீது தொடரப்பட்ட வழக்கு நேற்றுத் தொடர்ந்து சென்னை விசேஷ செஷன்ஸ் நீதிபதி திரு.பி. லக்ஷமணன் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட போது, ராதாவின் சிரேஷ்ட வக்கீலான திரு. மோகன் குமாரமங்கலம் தமது [illegible] தொடர்ந்து நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஷிங்டன் பாதுகாப்பு இலாகா கட்டிடம் மீது வியட்னாம் போர் எதிர்ப்பாளர் படையெடுப்பு

உலகின் பல நகர்களிலும் ஆர்ப்பாட்டங்கள்

வாஷிங்டன், ஒக்டோபர் 22

பல்லாயிரக்கணக்கான வியட்னாம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள், நேற்று வாஷிங்டனிலுள்ள பாதுகாப்பு இலாகா கட்டிடத்தின் மீது படையெடுத்தனர். ஊர்வலமாகச் சென்று, கட்டிடத்தின் படிக்கட்டுகளில் இவர்கள் அமர்ந்தனர்.

ஆர்ப்பாட்டக் காரரைப் படிக்கட்டுகளிலிருந்து அகற்ற, ராணுவத்துருப்புகள், தமது துப்பாக்கிப் பின்பாகத்தினால் அவர்களைத் தள்ளி மிதித்து பலமான நடவடிக்கை எடுத்தனர். பொலிசாரும் சில ஆர்ப்பாட்டக்காரர் மீது பொல்லடி பிரயோகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தையும் ஊர்வலத்தையும் எதிர்பார்த்து, வாஷிங்டனில் ஆயிரக்கணக்கான பொலிசாரும், துருப்புகளும் விசேஷமாக வரவழைக்கப்பட்டிருந்தன.

இவ்வளவு தடைகளுக்கு மூடாக, ஏறத்தாழ 20 ஆர்ப்பாட்டக்காரர்கள், கட்டிடத்தினுள் எப்படியோ புகுந்துவிட்டனர். ஆனால், அவர்களைத் துருப்புகள் அடித்துத்தள்ளி வெளியேற்றிவிட்டன.

100 பேர் கைது

இந்த ஆர்ப்பாட்டங்களின் போது 100 பேருக்கு மேல் கைதுசெய்யப்பட்டனர்.

லிங்கன் நினைவுச் சின்னத்திலிருந்து புறப்பட்ட இவ்வூர்வலம், ஆரம்பமாகியது. லிங்கன் நினைவுச் சின்னத்தினடியில், சமாதான தீப்பந்தமொன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்தனர். இந்தத்தீப்பந்தம், ஜப்பானில் ஹிரோஷிமாவிலிருந்து, அஞ்சல் ஓட்டம் மூலமாக அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்டதாகும். எட்டு வார அஞ்சல் ஓட்டத்துக்குப் பின், இத்தீப்பந்தம் நேற்று வாஷிங்டனை வந்தடைந்தது.

வியட்னாம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வாஷிங்டனைத் தவிர, அமெரிக்காவின் பல இதர நகரங்களிலும், உலகின் பலபாகங்களிலும் நடைபெற்றுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

கனடா

கனடாவின் பல பிரதான நகரங்களில், வியட்னாம் போரை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளன.

மே. ஜெர்மனி

மேற்கு பெர்லினில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில், 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

சுவீடன்

ஆம்ஸ்டெர்டாமிலும். சுவீடன் தலைநகரான ஸ்டொக்ஹோமிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

பிரான்ஸ்

பிரான்ஸில், பாரிஸ் நகரில், பெரிய ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும் நடைபெற்றன இந்தஆர்ப்பாட்டத்தை 30 பிரரெஞ்சு ஸ்தாபனங்கள் சேர்ந்து நடத்தியுள்ளன.

டோக்கியோ

டோக்கியோவில் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. டோக்கியோவிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் முன்னிலையிலும் ஆர்ப்பாட்டக்காரர் மறியல் செய்தனர்.

இத்தாலி

இத்தாலிய நகரான டூரினில் 10 வியட்னாம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர் கைது செய்யப்பட்டனர்.

'குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்த மாட்டாது'

— டீன் ரஸ்க்

வாஷிங்டன், ஒக். 22

இதற்கிடையில், நேற்று 'வொயிஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்பிய பேட்டியொன்றில், வடவியட்னாம் மீதான குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்தமாட்டாது என்று அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க் அறிவித்துள்ளார்.

வட வியட்னாமிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கை கிடைக்காதவரை, அமெரிக்கா குண்டுவீசுவதை நிறுத்தாதென்றும், குண்டு வீச்சில் தற்காலிக நிறுத்தி வைப்பு ஏற்படும் பட்சத்தில், அதை வடவியட்னாம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தாது என்று உறுதியளிக்கவேண்டுமென்றும் திரு. ரஸ்க் கூறினார்.

சில முக்கியமான ஆயுதங்களையும், ஏவுகணைகளையும் வடவியட்னாமுக்குரஷ்யாவே அளித்து வந்தாலும், வடவியட்னாமுக்குத் தேவையான சிறு ஆயுதங்கள், தளபாடங்கள் அத்தனையும் சீனாவினாலேயே கொடுக்கப்பட்டு வருவதாகவும் திரு. ரஸ்க் குறிப்பிட்டார்.

'வியட்னாம் பிரச்னை இப்போதைக்குத் தீராது'

— சிங்கப்பூர் பிரதமர்

நியுயோர்க், ஒக். 21

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் காலம் வரை, வியட்னாம் பிரச்னைக்கு முடிவு எதுவும் ஏற்படும் எனத் தாம் நம்பவில்லையெனச் சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவாண்யூ, ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் குறிப்பிட்டார்.

அவர், ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்டைச்சந்தித்துப் பேசிய பிறகே இவ்வாறு கூறினார். திரு. லீ குவாண்யூ, அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தார்.

சிங்கப்பூர் பிரதமருடன் தாம் பேசியது என்ன என்பது பற்றிப் பகிரங்க அறிவிப்பு எதையும் இப்போது செய்யத் தாம் விரும்பவில்லை என்று யுதாண்ட் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இந்திய துணைப் பிரதமர் நேபாளம் புறப்பட்டார்

புதுடில்லி, ஒக். 22

இந்திய துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், இன்று காலை இங்கிருந்து விமான மூலமாக நேப்பாளம் பயணமானார்.

நேபாளத்தில், நேபாள பிரதமருடனும், துணைப் பிரதமருடனும் திரு. தேசாய், பேச்சுவார்த்தைகள் நடாத்துவார்.

நேபாளம் புறப்படுவதற்குமுன், பாலம் விமான நிலையத்தில் பத்திரிகையாளரிடம் பேசுகையில், இந்தியாவுக்கும் நேபாளத்துக்குமிடையேயான உறவுகளை வலுப்படுத்தவும், பரஸ்பரம் அக்கறையுள்ள பிரச்னைகளை ஆராயவுமே தாம் நேபாளம் செல்வதாக திரு. தேசாய் கூறினார்.

நேபாளத்துக்கு திரு. தேசாயின் முதலாவது விஜயம் இதுவேயாகும்.

ஏதென்ஸில் 27 பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்தனராம்

ஏதென்ஸ், ஒக். 22

ஏதென்ஸில் இராணுவ ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்த குற்றச்சாட்டில் 27 பேர் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள்.

இந்தச் சதிக் கோஷ்டியின் தலைவரெனக் கருதப்படுபவருக்கு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மற்றவர்களுக்கு 2 முதல் 17வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் 11 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஒலிம்பிக் ஒத்திகை ஹொக்கிப் போட்டி

மேற்கு ஜெர்மனி சாம்பியன்

லண்டன், ஒக். 22

லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் ஒத்திகை ஹாக்கிப் போட்டியில் மேற்கு ஜெர்மனி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

நேற்று இறுதி ஆட்டத்தில் பிரிட்டனை மேற்கு ஜெர்மனி 5-1 கோல்களால் வெற்றியீட்டியது.

முன்னணியில் நின்று கொண்டிருந்த இந்தியா, நேற்றைய ஆட்டத்தில், பாகிஸ்தானிடம் 1-0 கோல்களால் தோல்வியடைந்ததன் விளைவாக போட்டியில் 3-வது இடத்தையே இந்தியாவினால் கைப்பற்ற முடிந்தது. நான்காவது இடம் பாகிஸ்தானுக்கு.

இஸ்ரேலில் நாசகாரியை ஐ. அ. கு. மூழ்கடித்தது

மற்றுமொரு கப்பலுக்கு கடும் சேதம் விளைக்கப்பட்டது

கெயிரோ, ஒக். 22

ஐக்கிய அரபுக் குடியரசு நீர்நிலைகளில் பிரவேசித்த இஸ்ரேலிய நாசகாரிக் கப்பலொன்றை ஐ. அ. கு துருப்புகள் மூழ்கடித்துள்ளதாகக் கெயிரோ ரேடியோ அறிவித்துள்ளது.

இக்கப்பல், செயித் துறைமுகத்துக்கு வடக்கே பிரவேசித்ததாகவும், அப்போது ஐ. அ. கு. துருப்புகள் அதனைத்தாக்கி மூழ்கடித்ததாகவும் ரேடியோமெலும் தெரிவித்தது.

மற்றுமொரு கப்பல்

இரண்டு மணி நேரம் கழித்து, அப்பகுதிக்கு வந்த மற்றுமொரு இஸ்ரேலிய கப்பல், கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டதாகவும் ரேடியோ கூறியது.

செயித் துறைமுகத்துக்கருகே நங்கூரம் பாய்ச்சப்பட்டிருந்த தனது கப்பலொன்றை ஐ. அ. கு. ஏவுகணைகள் தாக்கியிருப்பதாக இஸ்ரேலிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

230 பேர்

இக்கப்பலில் மொத்தம் 230 பேர் இருந்தனர். கப்பல் மூழ்கடிக்கப்பட்டதால், ஆட்சேதம் எவ்வளவு என இது வரை தெரியவில்லை.

ஆனால், காயப்பட்டோரை அனுமதிக்க ஆயத்தமாக இருக்கும்படி ஆஸ்பத்திரி ஒன்றுக்கு இஸ்ரேல் அதிகாரிகள் அறிவிப்புக் கொடுத்திருப்பதிலிருந்து, அதிக ஆட்சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வெளிவருகிறது! எதிர்பாருங்கள்!!

நவம்பர் மாதம் 15-ம் திகதி நடைபெறவிருக்கும் 'தபால் கந்தோர் தலைவர், தந்தியாளர்' பரீட்சைக்கு 24-10-1967 லிருந்து

'பொது அறிவும் உள்ளூர் அறிவும்'

என்ற கேள்வித்தாளுக்கு மாதிரி வினாவிடைகள் வெளிவருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நெருப்புக்கொள்ளியை வீட்டுக்குமேல் எறிவதைப் பார்த்தேன்'

தீவைத்துசேதப்படுத்தியதான வழக்கில் சாட்சியம்

குரும்பசிட்டி, ஞாயிறு

''தமையனார் வீட்டிலிருந்த நான் துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதைத் தொடர்ந்து எனது வீடு நோக்கி ஓடி வந்தேன். வீட்டு முன்புறத்தில் 2-ம் 3-ம், 4-ம் எதிரிகள் தமது கைகளில் துப்பாக்கி தாங்கி நிற்பதைக்கண்டேன். முதல் எதிரி நெருப்புக்கொள்ளியை எமது வீட்டுக்கு மேல் எறிவதை நான் அப்பொழுது பார்த்தேன். வீடு தீப்பற்றி எரியவே பயத்தினால் திரும்பவும் வந்த வழியே ஓடி தோட்டத்தில் தங்கிருந்த நான் மறுபடியும் அடுத்தநாள் எமது வீட்டுக்குத் திரும்பினேன்.''

இவ்வாறு என் தில்லை நாதன் என்பவர் வீட்டுக்குத்தீ வைத்து சேதப்படுத்தியதான வழக்கு ஒன்றில் மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ் நெத்தசிங்கா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

சங்கானை மேற்கைச் சேர்ந்த நாகலிங்கம் லட்சுமி என்பவரது வீட்டுக்குத் தீ வைத்துச் சேதப்படுத்தி 2000ரூபா நஷ்டம் விளைவித்ததாகச் சங்கானைப் பொலிசார் இராமு, திருநாவுக்கரசு, இராசதுரை, செல்வரத்தினம் ஆகிய நால்வருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். இ சம்பவம் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 7-ம்திகதி நடைபெற்றுள்ளது. நாகலிங்கம் லட்சுமி என்ற பெண்மணியும் சாட்சியமளித்தார்.

மேல் விசாரணையை இம் மாதம் 22-திகதிக்குநீதிபதிஒத்திவைத்தார் எதிரிகள்சார்பில் வழக்கறிஞர் ஆர்.ஜே, செல்வரத்தினம்ஆஜரானார்.

மன்னார்

பஸ் பிரயாணிகள் கஷ்டம்

மன்னார், சனி

இங்குள்ள பஸ்நிலையத்தில் நேரஅட்டவணை விளக்கம் இல்லாததுபற்றிப் பொது மக்கள் புகார்செய்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததுபற்றி இங்குள்ள மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர், பஸ் சேவை விபரங்களை அறிந்துகொள்ள விரும்பும் மக்களிடம் இங்குள்ள இ. போ. ச. ஊழியர்கள் கண்ணியமின்றி நடந்துகொள்வதாகவும்அறியப்படுகிறது.

உதைபந்தாட்டபோட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. உதைபந்தாட்டக் கோஷ்டியினருக்கும், பேராதனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் கோஷ்டியினருக்குமிடையே ஒரு சினேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நாளை பிற்பகல் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

அனுராதபுரத்தில் மலேரியா நோய்

அனுராதபுரம், ஞாயிறு

அனுராதபுரத்திலும் மற்றும் இதை அடுத்துள்ள கிராமப் புறங்களிலும் தற்போது மீண்டும் மலேரியா நோய் ஆரம்பித்துள்ளது.

சுகாதார இலாகாவினால் மலேரியா தடுப்பு இயக்க மூலம் தடுப்பு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் இதனைத் தடுக்க முடியவில்லை. அனுராதபுர ஆஸ்பத்திரிகளில் இந் நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரித்து வருகின்றது.

மலேரியா தடுப்பு இயக்கத்தில் கடமையாற்றும் ஓர் உயர்தர உத்தியோகத்தரையும் இந் நோய் பீடித்துள்ளதாகத் தெரிகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 23-10-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 குரல்வகை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 நாளைய சந்ததி.

இரவு 6-15 ஜலதரங்கம்— ஆசிரியர் சுசீலா பாலச்சந்திரன், 6-45 கிராமசஞ்சிகை, 6-15 பாவளம், 7-30 முத்திநெறி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு — ஐ. நா. தினம், 9-45 நாட்டு — ஏ. எஸ். நாராயணன்.



★ நீடித்து உழைப்பது
★ சௌகரியமானது
★ நவீனமானது
★ சிக்கனமானது

இந்த சோற்கள்

எஸ்-லோன் பீலியை உருவாக்க உதவின

உறுதியான எஸ்-லோன் பீவீசீ மழைநீர்ப் பீலிகள் நிரந்தர உழைப்பை நினைவில் வைத்துத் தயாரிக்கப்பட்டவை. உலோக மழைநீர்ப் பீலிகளை அரித்தழிக்கும் கறளுடன் கட்டியழும் பிரச்சினை, விழலுக்குப் பணத்தை வீணே விரயமாக்குவோருக்கே இனிச் சொந்தம்!

இலகுவில் பொருத்தக்கூடிய மழைநீர்ப் பீலி இது. இதைப் பொருத்த அதிக வேலையாட்கள் அவசியமேயில்லை. கறள் அரித்த உலோகப் பீலியைக் கழற்றி வீசும் அதேயளவு விரைவாக இந்தப் பீலியைப் பொருத்தி விட முடியும்.

நவமான வீடுகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும். அவற்றின் புதுப் பாணிக்கு உகந்த அழகு வளைவுள்ள எஸ்-லோன் பீலிகளைப் பொருத்துவதே பொருத்தம். பழைய பத்தாம் பசலியான விலை கூடிய உலோக வடிகால் ரகப் பீலிகளுக்கு விடை கொடுங்கள். உங்கள் கட்டிடங்களுக்கு எஸ்-லோன் கொண்டு உன்னதமான புது மெருகூட்டுங்கள்.

நாளது வரை, மழைநீர்ப் பீலிகளில் மகத்தான இலாபக் கொள்முதல் எஸ்-லோன். இடி மின்னல் அடை மழைக்குப் பின் இடைக்கிடை பீலி மாற்றும் இடர்ப்பாடுகள் இனி இல்லை. அந்தக் கவலையை விட்டொழிக்க விரும்புவோர்க்கென்றே தயாரானது எஸ்-லோன்!

S-lon

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

மகாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

கல்வி

வகுப்புகள்:

B. A., G. A. Q., G. C. E. [A. L.] ஆகிய வகுப்புக்கள் 11-10-67ல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. புவியியல், வரலாறு, தமிழ், அரசியல், சமஸ்கிருதம், பொருளாதாரம், தூயகணிதம், பிரயோக கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், [JAFFNA EDUCATION CENTRE], 304/3, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2269

கொழும்பு

ஆயுர்வேத கல்லூரி பெறுபேறு

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க ஆயுள்வேதக் கல்லூரிப் பரீட்சையில் பின்வருவோர் சித்தியெய்தியுள்ளனர்.

இரண்டாம் தரம் [ஆனர்ஸ்] எஸ். பவானி, செல்வி பி. பொன்னம்பலம், கே. மருதையினர், ஏ. ஆர். எம். தாஹிர். சாதாரண சித்தி பி. பத்மநாதன், கே. சிவநாதன். ஆர். இரகுநாதன் பரீட்சையைப் பூர்த்தி செய்தார்.

நியூ காலிங்கன்

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி விடுமுறைதினங்களில் 2-30

ஜெய் சங்கர்

நடித்த

நாம் மூவர்

REGAL JAFFNA

Daily at 4-40 7-00 p. m 9-30 p. m.

Morning Shows at 10-30a.m. Pre, Poya & Holiday

Peter O'Tool Aleo & Cuinness

LAWRENCE of ARABIA

விளம்பரம்

ஏல விற்பனவு

குரும்பசிட்டி திரு வேலுப்பிள்ளை வன்னியசிங்கமவர்களிடம் 1-10-66 திகதிக்கு முன்வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவற்றை 5-11-67 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்.

வண்ணார்பண்ணை. 292

கரபந்தாட்ட பிரதிநிதிகள் விஜயம்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை கரபந்தாட்ட சமாஜப் பிரதிநிதிகளான திருவாளர்கள் அழகேந்திரமும், கார்டாவும் கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள்.

வடபகுதி கரபந்தாட்ட சங்கத்தின் விசேஷ கூட்டமொன்றில்கலந்து கொள்ளும்பொருட்டே இவர்கள் இங்கு வந்திருந்தார்கள். பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுமார் 75க்கும் மேற்பட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் கலந்து கொண்டார்கள், இரண்டு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த திருவாளர்கள் அழகேந்திரனும் கார்டாவும் கரபந்தாட்டப் பயிற்சிகளை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிமைதானத்தில் நடத்தினர்கள். (ந. நி

மனோகரா

யாழ்ப்பாணம்

Daily at

4-45, 7-00, 9-45

GO TO BLAZE

3-வது குதூகல வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] **பிளாஸா** [வெள்ளவத்தை]

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] **ஸ்ரீகிஷ்ணா** [திருமலை]

தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

ராஜ்

[நீர்கொழும்பு]

மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனாதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்

ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி

பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு

இசை: எம். எஸ். விஸ்வநாதன்

பீடைகள், களைகளிடமிருந்து உங்கள் நெற்பயிரைக் காப்பாற்றுங்கள்.

ஷெல் பி. எச். சி. 10% தூள் — நெல் ஈயினது தாக்குதலின் ஆரம்ப அறிகுறி தென்பட்டதுமே நெற்கதிர்களை மூடி மறைக்கத் தக்கதாக ஷெல் பி. எச். சி. 10% தூள் தூவிப் பயிரைக் காப்பாற்றுங்கள்

'என்றெக்ஸ்' 20 — சங்குக் குத்தி, அறக் கொடியான் மற்றும் ஏனைய கிருமிப் பீடைகளின் தாக்குதலற்ற பயிரையும் அமோகமான விளைச்சலையும் பெறுதற்கு மாதந்தோறும் கிரமமாக என்றெக்ஸ் 20 தெளித்து வரவும்.

ஷெல் களைப்புற்கொல்லிகள்

'எம் — 50' மற்றும் 'டி' — சிறுகோரை, சந்தணக் கோரை, மும்மூட்டுக் கோரை, கிடச்சி ஆகிய அகன்ற இலைக் களைகளையும் முற்கோரைப் புற் களையும் வன்மையாகக் கட்டுப்படுத்துதற்கு, நெற் பயிர் 3 - 6 வாரப் பருவமுள்ளதாய் இருக்கும் கட்டத்தில் 'எம் - 50' அல்லது 'டி' தெளிக்கவும்.

ஷெல் களைப்புற்கொல்லி 'ஆர்'

(3, 4 டி. பி. ஏ. சேர்க்கப்பட்டது) — களைப்புற் கொல்லி 'எம் - 50', 'டி' ஆகியவற்றால் கட்டுப்படுத்தும் சகல களைகளையும் நெற்சப்பி, கடுக்கன் புல், குதிரைவாற் புல், பன் முதலிய புற்களையும் பூண்டோடு ஒழிப்பதற்கு ஷெல் களைப்புற்கொல்லி 'ஆர்' தெளிக்கவும். தெளிப்பு வேளை, களைகள் இரண்டு இலை தள்ளியிருக்கும் பருவத்தில், அதாவது நெற்பயிர் 7 - 18 நாள் வளர்ச்சியடைந்திருக்கும் கட்டத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL

GRANT 2085

எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

ரோயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருடமாகியும் விசாரணை ஆரம்பிக்கப்படவில்லையாம்

தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட அரசாங்க ஊழியர்நிலை

"வழக்கறிஞரின் உதவி பெற வழி செய்க"

கொழும்பு, திங்கள் சென்ற ஓர் ஆண்டுக்குள் அரசாங்க ஊழியர்கள் 571 பேர் தற்காலிகமாக வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்குஎதிரான விசாரணைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லையெனவும் பொது சேவைக் கமிஷனுக்குத் தொழிற் சங்கங்கள் புகார் செய்துள்ளன

அரசாங்க இலாகாக்களில் வேலை செய்யும் ஊழியர்கள் அரசியல் காரணங்களுக்காகவும் வஞ்சம் தீர்க்கும் நோக்கத்துடனும் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டு பல மாதங்களாகியும் இதுவரை அவர்கள் விஷயமாக எவ்வித விசாரணையும் ஆரம்பிக்கப்படாததால் அவர்கள் பெரிதும் கஷ்டப்படுவதாக பல தொழிற்சங்கங்கள்பிரதமருக்கும் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட அரசாங்க ஊழியருக்கு அரை மாதச் சம்பளம் வழங்கப்பட்டுவருகிறது.

இவர்களுக்கெதிரான விசாரணைகள் நடைபெற்று, விசாரணையின்பின் வேலைக்கு மீண்டும்அமர்த்தப்பட்டால் அரசாங்கம் இவ்வுத்தியோகத்தர்களுக்கு முழுச்சம்பளமும் வழங்கவேண்டியிருக்கும்.

அண்மையில் பிரதமரைச் சந்தித்த அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கமும் இவ்விசாரணைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டுமென்றும் ஜனவரி 8-ந் திகதி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டபவந்கள் வேலைக்கு அமர்த்தப்படவேண்டுமென்றும் கேட்டுள்ளது, தற்காலிக நிதிமந்திரியான திரு. என். விமலசேன 8-ந் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டுமென அண்மையில் சிபார்சு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளின்போது வழக்கறிஞர்களை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்துள்ளது போல தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட அரசாங்கஊழியர்களுக்கும்வழக்கறிஞர்களின் உதவிபெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமென தொழிற்சங்கங்கள் பல கோரியுள்ளன.

94 தபால் பைகள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், திங்கள் 94 தபால் வெற்றுப் பைகள் நேற்று முன்தினம் பாஷையூரில் ஒரு 'அற்ஹோம்' வைபவம் நடந்து கொண்டிருந்த வீட்டில் கரையூர் பொலிஸ் உத்தியோகத்தர் திரு. சூசைப் பிள்ளை தளைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி கைப்பற்றியது. யாழ்ப்பாணம் தபால் இலாகாவைச் சேர்ந்த தபால் பைகள் என அடையாளம் காட்டப்பட்டதாகவும் தெரிகிறது. இது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட இருவர் நேற்று யாழ்பாணம் மாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வெள்ள நிலைமை சீரடைகிறது

கொழும்பு, ஞாயிறு கொழும்பில் வெள்ள நிலைமை சீரடைந்துவருகின்றது. களனி கங்கை நீர்மட்டம் அங்குலம் அங்குலமாக குறைந்து வருகின்றது. இன்று மாலைவரை கொழும்பில் மழைபெய்யவில்லை. துறைமுகத்தில் அமைதி நிலவுகின்றது. ஆனால்வேலைகள் ஆரம்பமாகவில்லை.

நீரினால் சூழப்பட்டு வெளியேறமுடியாமல் தவிக்கும் மக்களின் நிவாரணத்துக்கான நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. விமானம்மூலம் உணவு பொட்டலங்கள் போடப்படுகின்றன.

நாட்டின் பல பகுதிகளிலும் வெள்ள நிலைமை சீரடைந்து வருகின்றது. கால நிலை சீரடையும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்தது.

திருமலையில் 10.30 அங்குல மழை

திருக்கோணமலை, ஞாயிறு கடந்த இரவு முழுவதும் திருக்கோணமலைநகரில் கடும் மழை பெய்தது. அத்துடன் பலத்தகாற்றும்வீசிக்கொண்டேயிருந்தது.

சீனாகுடாவிலுள்ளதேயிலை நிர்வாக நிலையத்தில் இன்று பகலுடன் முடிவடைந்தஇரு பத்தினான்குமணி நேரத்திற்குள் 10.30 அங்குல மழை பதிவாகியுள்ளது.

பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை திருக்கோணமலை காலநிலையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகச் செய்தி கிடைக்கவில்லை.

குடிசையில் கிடந்த சடலம்

விபரீத மரணம்: மாஜிஸ்டிரேட் தீர்ப்பு

குரும்பசிட்டி, ஞாயிறு இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 9-ம்திகதி அச்சுவேலி வடக்கு மடத்தடியில் தனியான குடிசையொன்றில் கோரமாக இறந்துகிடந்த சுந்தரன் அரியநாயகம் [20 வயது] வாலிபரின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு.ரி. எஸ். நெத்த சிங்கா இம் மரணம் ஒரு விபரீத மரணம் என இன்று தீர்ப்பு வழங்கினார். அச்சுவேலியில் நிகழ்ந்த கலவர காலத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

காலஞ்சென்றவரின் சடலத்தை காங்கேசன்துறை மாவட்ட உதவி வைத்திய அதிகாரி திரு. என். சிவசுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தியிருந்தார்.

இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது திரு. சுவசுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில், பரிசோதனையின்போது மரணமானவரின் முகம், கழுத்து, நெஞ்சுஆகிய உறுப்புக்களில் பலத்த எரிகாயங்கள்காணப்பட்டன. இடதுகை தோள் மூட்டிலிருந்து விடுபட்டு முற்றாக சிதைந்த நிலையில் கழன்று இருந்தது. கால், தொடைபோன்ற பாகங்கள் எரிகாயங்களால் பிளவுபட்டிருந்தன. கைவிரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தன. வெடிமருந்துகள் மூலம் கைகளில்வைத்து வெடிகுண்டு தயாரிக்கும் போது மரணமானவருக்கு இக்காயங்கள் ஏற்பட்டிருக்கலாம். அதிர்ச்சியினாலும், பலத்த எரிகாயங்களாலும் அதிகஇரத்தப்பெருக்காலும் இம்மரணம் நடைபெற்றிருக்கலாம் என்பது எனது கருத்தாகும்.

இம்மரணப் குறித்து நீதிபதி தீர்ப்பு வழங்குகையில் "காலம் சென்றவரது பெற்றோர் இம்மரணத்துக்கு காரணமாக வேறு எவரும் இருப்பர் என சந்தேகிக்கவில்லை. சம்பவம் இடம் பெற்ற ஸ்தலத்தில் பொலிசார் உடைந்து சிதறிய போத்தல் ஓடுகளையும், எரிந்த துணிவகைகளையும் கண்டெடுத்துள்ளனர். பொலிஸாரும் வைத்திய அதிகாரியும், மரணமானவரின் பெற்றோர்களும் கொடுத்துள்ள தகவல்களின் அடிப்படையில் இம்மரணம் ஒரு விபரீதமான மரணம்" எனக்குறிப்பிட்டார்.

பொலிஸ் தரப்பில் காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சிவபாதம் ஆஜராகியிருந்தார்.

சாவகச்சேரி எம். பி. க்கு 3 மாத 'லீவு'

கொழும்பு, ஞாயிறு சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினத்திற்கு மூன்றுமாத கால லீவு வழங்கப்படவேண்டுமென்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் டாக்டர் இ. எம். வி. நாகநாதனால் கொண்டுவரப்பட்ட பிரேரணை திரு. எஸ். எம். இராசமாணிக்கத்தினால் பிரேரிக்கப்பட்டு சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. நவரத்தினம் தற்சமயம் வெளிநாடு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எம். ஜி. ஆர். - ராதா வழக்கு

ராதாவை விடுதலை செய்க

குமாரமங்கலம் கோரிக்கை

'என்மடிவு' கடித இரத்தக் கறை; கோயம்புத்தூர் கோஷ்டிபிரஸ்தாபம்

சென்னை, ஒக். 22

எம். ஜி. ஆர். - எம். ஆர். ராதா வழக்கில், ராதாவின் சிரேஷ்ட வழக்கறிஞரான திரு. மோகன் குமாரமங்கலம், நேற்றுத்தமது தொகுப்புரையின் முடிவில், எம். ஜி. ஆர். தோட்டத்தில் ஜனவரி 12 திகதியன்று நடந்த சம்பவத்தின் அடிப்படையில், ராதாவை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

சட்டத்திலுள்ள எந்த விசேஷவிதிகளின்கீழும்தாம் தஞ்சம் தேடவில்லை யெனவும், ஆனால், ராதாவின் முற்று முழுதான விடுதலையையே தாம் கோருவதாகவும் திரு. குமாரமங்கலம் கூறினார்.

இரத்தக்கறை

'என் மடிவு' கடிதம்பற்றி திரு. குமாரமங்கலம் குறிப்பிடுகையில், அக்கடிதத்தின் கடைசிப்பக்கத்தில் இரத்தக்கறைகள் காணப்படுவது, புரொசிக்கியூஷன் தரப்புக்கு அல்லாது எதிரி, தரப்புக்கே சாதகமாக அமைந்துள்ளதெனக் கூறினார். ஏனெனில், புரொசிக்கியூஷன் தரப்பு வாதப்படி, ராதாவினுடையசேட் இரத்தத்தில் தோய்ந்திருந்தது. இது இப்படியாயின், சூட்டுச்சம்பவம் நடைபெற முன்னர், இக்கடிதம் ராதாவின் சேட் பொக்கெட்டில் வைக்கப்பட்டிருந்தால், இன்னும் அதிக இரத்தம் காணப்பட்டிருக்கும். ஆனால் சிறு சிறு இரத்தத்துளிகள் இருப்பது, இந்தத் 'தாள்கள்' ராதாவினால், சைதாப் பேட்டை அல்லது ராயப் பேட்டை ஆஸ்பத்திரியில் வைத்துக் கையொப்பமிடப்பட்டுப் பொலிசாருக்கு அளிக்கப்பட்ட தென்பதையே ஆதரிக்கிறது. கையொப்பமிடும் போதே, இரத்தத்துளிகள் பட்டிருக்கின்றன.

'என் மடிவு' கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது யாவும், 'நாத்தீகம்' கட்டுரைகளின் தொகுப்பே என்றார் திரு. குமாரமங்கலம்.

கோயம்புத்தூர் கோஷ்டி

விசாரணை உத்தியோகத்தர் ஜி. கே. ரங்கநாதனின் சாட்சியத்தைப்பற்றி திரு. குமாரமங்கலம் குறிப்பிடுகையில், அசோக் ஹோட்டலில் தாம் விசாரித்ததாகவும், படம் எடுப்பதில் அக்கறை கொண்ட எந்தக் கோயம்புத்தூர் கோஷ்டியாவது அந்தக் ஹோட்டலில் ஜனவரி 12-ந் திகதி யளவில் தங்கியிருக்கவில்லை யெனவும் ஜி. கே. ரங்கநாதன் கூறியிருக்கிறாரென்று சொன்னார். இப்படிக் கூறுவது, விசாரணை உத்தியோகத்தர் ஒருவருக்குரிய கடமையல்ல. ஹோட்டலில் உள்ள ஒருவரை அழைத்து வந்து, அவர் மூலம் இப்படிச் சொல்லச் செய்வதே, புரொசிக்கியூஷனின் கடமையாகும்.

ஒரு படத்தில் நடிக்க எம். ஜி. ஆரின் இசைவைப் பெறவும், பொங்கலை அடுத்து விரைவில் இப்படம் படம்பிடிக்கப் படுமென்று

[2-ம் பக்கம் பார்க்க]

இரணைமடு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களால் சேதப்படுத்தப்பட்ட இடங்களை நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டார். இரணைமடுப் பகுதியில் கரவெட்டியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் அண்மையில் யானையொன்றினால் கொல்லப்பட்டது, தெரிந்ததே. நேற்று முன்தினமும் சைக்கிளில் சென்ற வாலிபர் ஒருவரை துரத்திய யானை ஒன்று வாலிபர் சைக்கிளை நிலத்தில் போட்டுவிட்டு ஓடவே சைக்கிளை சுக்கு நூறாக உடைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிர் சேதத்துக்குள்ளான விவசாயிகள் நஷ்டஈடு கோரி அரசாங்கத்திடம் விண்ணப்பித்துள்ளதாகவும் இது சம்பந்தமாக உரியநடவடிக்கைகளை எடுக்க வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிகிறது. [ந. நி]

தோட்டாக்கள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டையறிவால்வர்கள் 6முறை சுடலாம். உண்மையில், ராதாவுக்கு எம்.ஜி. ஆரை சுட்டுக் கொலைசெய்யவேண்டுமென்ற எண்ணம் இருந்திருந்தால், தொடர்ந்து றிவால்வரை தோட்டாக்கள் தீரும்வரை சுட்டிருக்கலாம். ஆனால், அப்படி நடக்காததிலிருந்து தவறித்தான் எம்.ஜி.ஆர்.மீது சூடுபட்டிருக்கிறதென்பது தெரிகிற தல்லவா' என்றுகூறிய வழக்கறிஞர் மோகன் குமாரமங்கலம், வாசுவின்சாட்சியத்தை நம்பமுடியாதென்றார்.

எம்.ஜி.ஆருடைய ஷேர்ட் பொலிஸாருக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்னரே கழுவப்பட்டதற்குக்காரணம், எம்.ஜி.ஆரும் ராதாவும் இழுபறிப்பட்டபோது, ராதாவின் இரத்தம் எம். ஜி.ஆர். ஷேர்ட்டில் பட்டிருப்பது தெரிந்துவிடும் என்பதனாலேயே என்றும் திரு. குமாரமங்கலம் தெரிவித்தார்.

இரணைமடுக்குளம் நீர்மட்டம் உயருகிறது

யாழ்ப்பாணம், திங். கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்த மழையினால் இரணைமடுக்குளத்தின்நீர்மட்டம் தற்போது பதின்மூன்றரை அடியாக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இங்கு மழைபெய்யுமானால், நிலைமைமோசமாகலாம் என அஞ்சப்படுகின்றது. [ந, நி.]

தேவை

கொக்குவில் கிழக்குப்பல நோக்கக் கூட்டுறவுச்சங்கத்துக்குப் பயிற்சிபெற்ற மனேஜர் தேவை. தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விரும்புவோர் 26-10-67க்கு முன் தலைவருடன்தொடர்பு கொள்க. தலைவர்; பொ. கனகரத்தினம், மாத்தனை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 2273

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டேபர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org